# மெட்ரோ ரயில் நிலையங்களில் 3 நாள் பொங்கல் விழா நிறைவு

**சென்னை**

சென்னையில் இயக்கப்படும் மெட்ரோ ரயில்களில் பயணிகளை ஈர்க்கும் வகையில் பொங்கல் விழாவையொட்டி, கடந்த 10, 11, 12-ம் தேதிகளில் மாலை 5.30 மணி முதல் இரவு 7.30 மணி வரையில் பொங்கல் கலை விழா நடத்தப்பட்டது. தப்பாட்டம் கலை நிகழ்ச்சி, கரகம், காவடி, காளியாட்டம், நாட்டுப்புற கலை நிகழ்ச்சிகள், தெருக்கூத்து நடைபெற்றன. நிறைவு நாளான நேற்று பரதநாட்டியம், நாட்டுப்புற கலைநிகழ்ச்சிகளும் நடைபெற்றன. நுழைவு கட்டணம் இல்லை.இந்த கலை விழாவை ஆயிரக்கணக்கான மக்கள் நேரில் பார்த்து மகிழ்ச்சியடைந்தனர்.

இது தொடர்பாக பொதுமக்கள் சிலர் கூறும்போது, "கிராமங்களுக்கு சென்று இந்த விழாவை பார்க்க முடியாத மக்களுக்கு சென்னையில் ஒரு நல்ல வாய்ப்பாக இருந்தது" என்றனர்.